| 02-07-2023 | காலை முரளி | ஓம் சாந்தி | ''அவ்யக்த பாப்தாதா'' | ரிவைஸ் 26.01.1995 |
| --- | --- | --- | --- | --- |

பிரம்மா பாபாவின் இரு அடிகள் - கட்டளைக்குக் கீழ்படிபவர், நம்பிக்கையானவர்

இன்று பாப்தாதா நாலாபுறமும் உள்ள சினேகி-சகயோகி மற்றும் தனக்கு நிகரான சக்திசாலி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். அனைத்து குழந்தைகளுமே அன்பானவர்கள் தான். ஆனால் சக்திசாலி நிலையில் அவரவர் சக்திக்கேற்பவே இருக்கின்றார்கள். அன்பான குழந்தைகளுக்கு அன்பின் கைமாறாக பன்மடங்கு அன்பும், ஒத்துழைப்பும் கிடைக்கிறது. சக்தி சாலி நிலையில் நிகரான குழந்தைகளுக்கு என்றென்றும் விஜயி பவ என்னும் வரதானம் கைமாறாக கிடைக்கின்றது. அனைவருக்குமே கிடைக்கின்றது. அன்பானவர்கள் அவரவர் நிலைக்கேற்ப சக்திசாலியாக இருக்கின்ற காரணத்தால் என்றென்றும் சுலபமான வெற்றி அனுபவம் ஆவதில்லை. சிலநேரம் சுலபமாக, சில நேரம் கடினமாக உள்ளது. பாப்தாதா அன்பான குழந்தைகளுக்கும் உழைப்பை எளிமையாக்க ஒத்துழைப்பை தருகின்றார். ஏனெனில் சினேகி ஆத்மாக்கள் ஒத்துழைப்பும் தருகின்றார்கள். குழந்தைகளின் ஒத்துழைப்பிற்கு கைமாறாக பாப்தாதா அவசியம் ஒத்துழைப்பு தருகின்றார். ஆனால் யோகம் யதார்த்தமாக இல்லாத காரணத்தால் ஒத்துழைப்பு கிடைத்தும் பிராப்தியை அனுபவம் செய்ய முடிவதில்லை. யோகத்தின் மூலமாகத்தான் ஒத்துழைப்பு அனுபவம் ஆகிறது. சக்திசாலி நிலையில் நிகராக உள்ள குழந்தைகள் எப்போதும் யோக நிலையில் இருக்கின்றனர். எனவே ஒத்துழைப்பை அனுபவம் செய்து சுலபமாக வெற்றி யடைகின்றனர். இருப்பினும் பாபாவிற்கு இருவருமே அன்பான குழந்தைகள் தான். அன்பு மற்றும் சதா வெற்றி யடைய வேண்டுமென்ற நல் விருப்பமும் அனைத்து குழந்தைகள் மீதும் உள்ளது. ஆனால் சக்தி குறைவாக உள்ள காரணத்தால் தக்க நேரத்தில் மேலும் சர்வ சக்திகளையும் செயல்படுத்த முடிவதில்லை. பாபா ஆஸ்தியெனும் அதிகாரத்தில் சர்வ சக்திகளெனும் அதிகாரத்தையும் குழந்தைகளுக்கு தருகின்றார். அதிகாரம் தருவதில் பாப்தாதா வேறுபாடு காண்பிப்பதில்லை.அனைவரையும் சம்பூர்ண அதிகாரியாக்குகின்றார். ஆனால் பெறுவதில் வரிசைக் கிரமமாகின்றனர். பாப்தாதா சிலருக்கு சிறப்பு வகுப்பு, சிறப்புதனி வகுப்பு என டியூசன் தருகிறாரா என்ன? அப்படி தருவ தில்லை. அனைவருக்கும் ஒரே படிப்பு, ஒரே பாலனை. பாண்டவர்களுக்கு வேறு, சக்திகளுக்கு வேறு எனறு பாலனை தருகிறாரா என்ன? அனைவருக்கும் ஒரே விதமான பாலனை மற்றும் படிப்பு. ஆனால் பெறுவதிலும், ரிசல்ட்டிலும் எவ்வளவு வேறுபாடு காணப்படுகின்றது. அஷ்ட ரத்தினம் எங்கே 16108 இரத்தினம் எங்கே - எவ்வளவு வித்தியாசம். இந்த வித்தியாசம் ஏன்? படிப்பு மற்றும் பாலனையை, வரதானங்களை தாரணை செய்வதில், செயல் படுத்துவதில் வித்தியாசம் காணப்படுகின்றது. சில குழந்தைகள் தாரணையும் செய்து விடுகின்றார்கள். ஆனால் தக்க சமயத்தில் செயல்படுத்த தெரிவதில்லை. புத்திவரையிலும் அதிகம் நிரம்பி யிருக்கும் ஞானம். ஆனால் செயலில் வரும்போது வேறுபாடு ஏற்பட்டுவிடுகிறது.

பிரம்மா பாபா நம்பர் ஒன் வந்தது ஏன்? இரு அடி முன்பே சொல்லப்பட்டது.

மூன்றாவது சதா தந்தை, ஆசிரியர், சத்குருவிற்கு கீழ்படிபவரானார். ஒவ்வொரு கட்டளையையும் தலைமேற் கொண்டு ஆம் என்று உடனே செய்தார். தந்தையின் கட்டளை சதா பொக்கிஷம் எனும் ஆஸ்தியில் முழுமை ஆவது. முழுமை ஆக்குவதேயாகும். நடைமுறையில் பார்க்கும்பொழுது அனைத்து பொக்கிஷங்களான ஞானம், சக்திகள், குணம், உயர்ந்த நேரம், உன்னதமான எண்ணங்கள் அனைத்தையும் ஆரம்ப நாள் முதல் இறுதிநாள் வரையிலும் செயல் படுத்தினார். இறுதி நாளும் கூட சமயம், சங்கல்பம் எல்லாமே குழந்தைகளுக்கென பயன்படுத்தினார். ஞானமெனும் பொக்கிஷம், நினைவின் சக்தி மற்றும் பொறுமையின் சொரூபமாக இவை யணைத்து பொக்கிசமும் இறுதி நேரம் வரையிலும் உடலையும் மறந்து சேவையில் ஈடுபட்டு காண்பித்தார். இதனையே கீழ்படிந்து நடக்கும் நம்பர் ஒன் குழந்தை என சொல்லப்படும். ஏனெனில் பாபாவின் விசேஷ கட்டளையே நினைவு மற்றும் சேவையில் சதா பாப்சமான் இருக்க வேண்டும் என்பது தான். ஆக ஆதி முதல் இறுதி நொடி வரையிலும் இரு கட்டளை யையும் நடைமுறையில் பார்த்தீர்கள் அல்லவா? அன்பின் அடையாளம் தந்தையை பின்பற்று வதாகும். சோதனை செய்யுங்கள் - ஆதி முதல் இப்போது வரையிலும் அனைத்து பொக்கிஷங் களையும் தனக்காகவும் சேவையிலும் பயன்படுத்தினேனா? தந்தையின் கட்டளை ஒரு சுவாசம், எண்ணம், நொடியும் வீண் செய்யக் கூடாது. முழு நாளும் இந்த கட்டளையை நடைமுறைப் படுத்தினேனா? ஒருவேளை பாப்தாதா கீழ்படிந்து நடப்பவரின் பெயர் பட்டியலை உருவாக் கினால் நீங்கள் எந்த இடத்தில் வருவீர்கள்? தன்னைப்பற்றித் தெரியுமல்லவா? ஏனெனில் நீங்கள் அனைவரும் அனைத்து பொக்கிசங்களுக்கும் டிரஸ்டி, எஜமான் ஆவீர்கள். எனவே ஒரு எண்ணம் கூட தந்தையின் கட்டளையின்றி பயன்படுத்த முடியாது. நானே பாலக் சோ மாலிக், எனவே வீண் செய்தால் என்ன?இதில் பாபாவிற்கு என்ன ஆயிற்று. பாபா தான் கொடுத்து விட்டாரே, இப்போது ஏன் கணக்கு கேட்கின்றார்? இல்லை, கூடாது நீங்கள் தினமும் பாபாவிடம் சொல்கின்றீர்கள், பாபா எல்லாம் உமதே எனதல்ல, சொல்கிறீர்கள் தானே! அல்லது சமயத்திற்கேற்ப எனது உனது என்பீர்களா? பொதுவாக பாபா உங்களது தான், தனக்கு சாதகமான நேரத்தில் எனது..... இப்படியாக புத்திசாலி தனத்தை காண்பிப்பீர்களா? பிரம்மா பாபாவை பார்த்தீர்களா, தனது ஓய்வு நேரத்தையும் குழந்தைகளுக்காக ஞான சிந்தனை செய்வதில் ஈடுபடுத்தினார். இரவிலும் கண்விழித்து குழந்தைகளுக்கு யோக சக்தி வழங்கினார். இந்த வரலாறை கேட்டீர்களா? பிரம்மாவின் கதையை கேட்டீர்களா? தந்தையை பின்பற்றினீர்களா? மாறாக கேட்பதோடு நிறுத்திக் கொண்டீர்களா? கேட்பது என்றாலே செய்வதாகும்.

மூன்றாவது அடி என்றுமே ஆம் ஐயா, என்றென்றும் கூப்பிட்ட குரலுக்கு வந்தேன் ஐயா என்று ஓடி வந்து எதிரில் நிற்பது. ஒருபோதும் பிரம்மா பாபாவை சிவபாபா தனித்து விடவில்லை. எதிரிலேயே இருந்தார். பாபா என்றது குழந்தை, இனிமையான குழந்தாய் என்றார் பாபா. எனவே மனதளவிலும் என்றென்றும் ஒருவருக்கு ஒருவர் எதிரே இருப்பதை அனுபவம் செய்தனர். சேவையில் எப்பொழுதும் வந்தேன் ஐயா என்றார். இரவோ, பகலோ, கட்டளை கிடைத்ததும் செயல்படுத்தினார். செய-ல் சதா ஆம் ஐயா ஆம் ஐயா இந்த் பாடத்தை கற்பித்தார் அல்லவா! ஆக நீங்கள் என்ன பின்பற்றுகின்றீர்கள். சில சமயம் ஆம் ஐயா என்றும் சில சமயம் மாட்டேன் என்றும் சொல்வதில்லையே? அன்பின்

அடையாளத்தை காண்பியுங்கள். பாபா விடம் நான் வைத்துள்ள அன்பைப் போன்று வேறு யாரும் வைப்பதில்லை என்று நினைக்காதீர்கள். என் உள்ளத்தைப் பாருங்கள், என்னவென்று காண்பிப்பேன், என்னவென்று சொல்வேன்.... இவ்வா றெல்லாம் குழந்தைகள் பாடல் பாடுகின்றார்கள். ஆனால் அன்பின் அடையாளத்தைக் காட்டுங்கள். தந்தையை பின்பற்றுவதே அன்பின் அடையாளம் ஆகும். சோதனை செய்யுங்கள், மனோ நிலை, சேவை, செயல், தொடர்பில், சம்பந்தம் அனைத்திலும் சதா தந்தையை பின்பற்று கின்றேனா? ஒவ்வொரு கட்டளையும் புத்தி மட்டிலும் உள்ளதா? செயலிலும் வருகிறதா? ரிசல்ட்டை பார்க்கும்பொழுது புத்தியிலும், சொல்லிலும் 100 விசயம் உள்ளதென்றால் செயலில் 50 உள்ளது. அப்படி உள்ளவர்களை தந்தையை பின்பற்றுபவர் என சொல்லலாமா? அரைகுறை ரிசல்ட் உள்ளவர்களை தந்தையை பின்பற்றுபவர் என சொல்லலாமா? நீங்கள் என்ன நினைக் கின்றீர்கள்? அவர்கள் கீழ்படிபவர்களா? பாதி சொல்படி நடந்தாலே நீங்கள் திருப்தி அடைவீர் களா? சிறிதளவு வித்தியாசம் இருப்பின் பிடிக்குமா? ஆரம்பத்தில் மாலை அமைத்தார்கள், தங்கம், வெள்ளி என்றெல்லாம் பட்டியல் போட்டார்கள். அப்படியே மீண்டும் பட்டியல் போடலாமா? வெள்ளிக்கு பெயர் கொடுத்து உலோகத்திற்குச் செல்வீர்களா?

நேரத்தின் முக்கியத்துவத்தை தந்தையும் தருகிறார், இயற்கையும் தருகிறது. இயற்கை சவாலும் விடுகின்றது. சமயத்திற்கேற்ப நீங்களும் பிறருக்கு முக்கியத்துவத்தை கொடுத்துக் கொண்டு தான் இருக்கின்றீர்கள். சொற் பொழிவிலும் நேரம் வந்து விட்டது, வந்து விட்டது என்கிறீர்கள். தனக்கும் அதனை சொல்கின்றீர்களா? அல்லது பிறருக்கு மட்டும் தானா? பிறருக்கு சொல்வது சுலபம் தானே? தானும் இந்த நிலையை நினைவில் கொண்டு வாருங்கள். சமயத்திற் கேற்ப தனது முயற்சியின் வேகம் என்னவென்று பாருங்கள். பாப்தாதா ஒரு விசயத்தில் தனக்குத் தானே புன்னகை செய்கின்றார். அது எந்த விசயம் என்று தெரியுமா? ஒரு புறம் பெருவாரியான குழந்தைகள் அவ்வப்போது ஒரு நொடி நினைக்கின்றார்கள், சமயத்திற்கேற்ப முயற்சியின் வேகம் அதிகரிக்க வேண்டும், மறுபுறம் மாயையின் தாக்கம் ஏற்படும் போது அடுத்த நொடியே இதெல்லாம் நடப்பது தான், மகாரதிகளுக்கும் கூட பரம்பரையாக நடப்பது தானே என நினைக்கின்றார்கள். இப்படியிருந்தால் பாப்தாதா என்ன செய்வார்? கோபப்பட மாட்டாரே, சிரிப்பு தானே வரும். இதற்கான முக்கிய காரணம் யாதெனில், சமயத்திற்கேற்ப முயற்சி மிகவும் சுலபமாயிற்று, எளிமையானது சுபாவம் சுலபமாகவில்லை. சுபாவம் இறுகிப்போனது முயற்சியில் இலகுவாகின்றனர். பிறகு சகஜயோகம் தானே என எண்ணுகின்றனர். ஆனால் வாழ்வீல், முயற்சியில் இலகுவாக இருப்பது இதனை சகஜயோகம் என சொல்வதில்லை. ஏனெனில் இலகுவானால் சக்திகள் மறைந்து போகும், வெளிப்படுவ தில்லை. நீங்கள் அனைவரும் தனது பிராமண வாழ்வில் அரம்ப நாட்களை நினைத்துப் பாருங்கள். ஆன்று (ஆரம்பத்தில்) முயற்சி எவ்வாறு இருந்தது? இலகுவான முயற்சியா, கவனத்துடனான முயற்சியா? கவனத்துடனும், ஊக்கம் உற்சாகத்துடனும் முயற்சி செய்தீர்கள். இப்போது சோம்பல் எனும் டன்லப் பஞ்சனையும், தலையனையும் கிடைத்துவிட்டது. சாதனங்கள் யாவும் சொகுசு விரும்பியாக அதிகம் மாறிவிட்டது. எனவே தனது ஆரம்ப நிலையின் முயற்சி, சேவை மற்றும் ஊக்கம், உற்சாகம் இவற்றை சோதனை செய்யுங்கள். எப்படி இருந்தது. சொகுசு

விரும்பினேனா? (இல்லை). ஆனால் இப்போது சிறிது சிறது சாதனம் சேவைக்காகத்தான். சொகுசாக வாழ்வதற்கல்ல. எனவே இப்போது டன்லப் பஞ்சு மெத்தையை விட்டு கட்டாந்தரையில் வாருங்கள். அதாவது கட்டிலில் உறங்குங்கள் மனோநிலை மிகச் சாதாரணமாக பட்ராணி பட்ராஜாவாக இருக்கட்டும். பாருங்கள், ஆரம்ப காலத்தில் சாதனங்கள் இல்லை, ஆனால் சாதனை எவ்வளவு உன்னத நிலையில் இருந்தது. அன்றைய சாதனை தான் இவ்வளவு பெரிய வளர்ச்சி தந்தது. ஆகவே சாதனை எனும் விதையை விஸ்தாரத்தால் மறைத்துவிடாதீர்கள். விஸ்தாரத்தில் விதை மறைந்து போகின்றது. சாதனை என்பது விதை சாதனம் என்பது விஸ்தாரம். எனவே சாதனையெனும் விதையை மறைத்து விடாதீர்கள், மீண்டும் விதை வெளியே கொண்டு வாருங்கள்.

பாப்தாதா இந்த சீசனில் வேலை கொடுத்தார். ஆனால் செய்யவில்லை. என்ன கொடுத்தார்? நினைவுள்ளதா? நோட்டில் உள்ளதா? எல்லையில்லாத வைராக்கிய உள்ளுணர்வு குறித்து தானும் சிந்தியுங்கள், குழுவாகவும் கலந்துரையாடல் செய்யுங்கள் என்றார். நடைமுறையில் சாதனையெனும் விதையை வெளிப்படுத்துங்கள். செய்தீர்களா? ஒரு நாள் மட்டும் கூடிப் பேசினீர்கள், ஆனால் செயலில் வரவில்லை. நிகழ்கால நேரத்திற்கேற்ப தற்போது தனது சேவை மற்றும் சேவை நிலையத்தில் தினசரி வாழ்வில் எல்லையில்லா வைராக்கிய உள்ளுணர்வை அமையுங்கள். இப்போது தினசரி வாழ்வில் சொகுசுத்தன்மை கலந்து விட்டது. இந்த சோம்பல் தனமே சின்னஞ்சிறிய வியாதிக்கெல்லாம் வழிவகை செய்கிறது. முன்பும் வியாதி இருந்தது, மனதிற்கு பிடித்த சேவையென்றால் வியாதி நினைவு வருமா? உங்களுடைய மூத்த சகோதரி சொல்வார், வேண்டாம் உங்களுக்கு உடல் நலமில்லை, பிறரை செய்ய சொல்லலாம் என்றால் விடுவீர்களா? அப்போது தலைவலி, காய்ச்சல் எங்கே போய்விடுகிறது. அதே விருப்பமில்லாத சேவையெனில் என்னவாகும்? தலைவலியும் வயிற்று வலியும் வரும். கேட்டதுண்டா சாக்கு போக்கு சொல்வார்கள். காய்ச்சல் என்றால் டீச்சர் தர்மா மீட்டர் கொண்டு வாருங்கள் பார்ப்போம் என்பார். ஆனால் தலைவலியோ, வயிற்று வலியோ என்றால் அதை பார்க்க தர்மா மீட்டர் இல்லையே? மனம் சரியில்லையென்றால் வயிற்று வலி என்பார்கள், இவையாவும் சோம்பலின் சாக்கு போக்கு. எல்லையில்லா வைராக்கிய உள்ளுணர்வு மறைந்து போனது, சாக்குபோக்கு வெளிப்பட்டது.

பாப்தாதா பார்க்கின்றார், குழந்தைகள் அனைவரும் மிகுந்த அன்புடன் மதுபன் வந்துள்ளார்கள். அன்பை காட்டினீர்கள், அதற்கு வாழ்த்துக்கள். பாப்தாதாவிற்கும் குழந்தைகளின் மகிழ்வைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகின்றது, அடுத்து என்ன செய்ய வேண்டும். மதுபன் வரையிலும் வந்தது போதுமா? அல்லது அன்பின் அடையாளம் காண்பிக்க பரிஸ்தாவாகி வதனம் வருவீர்களா? என்ன செய்வீர்கள்? மதுபன் வந்தீர்கள் வாழ்த்துக்கள். ஆனால் பரிஸ்தாவாகி வதனத்திற்கு எப்போது வருவீர்கள்? நடமாடும் பொழுதெல்லாம் அனைவரையும் பரிஸ்தாவாகவே பாருங்கள். பேச்சு வார்த்தை, நடை, உடை பாவனை யாவும் பரிஸ்தாவினுடையதாகட்டும். பரிஸ்தா என்றாலே டபுள் லைட். தினசரிய வாழ்வில் லைட்டாகாதீர்கள், மாறாக உறவு, தொடர்பில், மனோ நிலையில் லைட்டாக இருங்கள். லைட்டாக மாறத் தெரியுமா? அல்லது

சுமை இருக்கிறதா? பாப்தாதா அன்பின் அடையாளம் காண விரும்புகின்றார். அன்பின் அடையாளம் தரும் பொழுது கைதட்ட வேண்டிய அவசியம் ஏற்படாது. ஆனால் மாயையும் இயற்கையும் ஆஹா வெற்றி ஆஹா வெற்றி என்று கைதட்டும். இப்போது ஏதேனும் மாற்றம் செய்யுங்கள்.

இப்போது தன்னை அன்பானவராக மட்டுமல்லாமல் சக்திசாலியாகவும் மாற்றுங்கள். தனது சுய மாற்றத்தில் சக்தி ரூபமாகுங்கள். சகஜயோகி, சகஜயோகி என்று சொல்லி சோம்பலாகி விடாதீர்கள். பாப்தாதா பார்வையில் தன்னில், தொடர்பில் எங்கும் அதிகமாக சோம்பலே காணப்படுகின்றது. எல்லாம் அப்படித்தான் என்று நினைக் காதீர்கள். ஒருவரை ஒருவர் பார்த்து காப்பி அடிக்காதீர்கள், பாபாவை காப்பி அடியுங்கள். பிறரை பார்க்கும் பழக்கம் சற்று அதிகமாகி விட்டது. தன்னை பார்ப்பதில் அலட்சியம் வந்து விட்டது. பாப்தாதா கூறினார் அல்லவா? கிட்டப்பார்வை பலவீனமானது தூரப் பார்வை பிரகாசமடைந்துள்ளது. இப்போது என்ன செய்வீர்கள்? இந்த சீசனின் பழம் என்ன தருவீர்கள்? பாபா வந்தார், சந்தித்தார், கொண்டாடினோம், முரளி கேட்டோம் - இது தான் பழமா? ஒவ்வொரு சீசனிலும் பழம் கிடைக்கிறதல்லவா? இந்தசீசனின் பழமாக பாப்தாதாவிற்கு என்ன போக் வைப்பீர்கள்? போக் வைப்பீர்களா? பழமும் வைப்பீர்கள் தானே? அது சந்தையில் கிடைத்துவிடும், ஒன்றும் பெரிய விசயமல்ல. இப்போது இந்த சீசன் பழம் என்ன தருவீர்கள், அல்லது போக் மட்டும் வைப்பீர்களா? வைப்பீர்களா கடினமா? நம்பர் ஒன் போக் எங்கிருந்து வருகிறது என்று பார்ப்போம். மிக நன்றாகவே வாக்குக் கொடுத்துச் செல்கின்றீர்கள், ஒருபோதும் மறுப்பு என்பதேயில்லை. ஆம் என்று சொல்வீர்கள், மகிழ்வித்து விடுகின்றீர்கள். ஆனால் இப்போது என்ன செய்வீர்கள்? ஆசிரியர்கள் நம்பர் ஒன் போக் வைப்பீர்களா? அனைத்து சென்டரின் போக் பார்க்கலாம். குடும்பத்தில் உள்ளவர்களும் போக் வைப்பீர்கள் தானே நீங்களே சாப்பிடுவீர்களா? சென்டரில் உள்ளவர்களின் வேலை மட்டுமே என்று நினைக்காதீர்கள். இது அனைவரது வேலையாகும். கீழ்படிபவர் என்ற அடியை நடைமுறைப்படுத்துங்கள்.

நாலாவது அடி: நம்பிக்கையாளர். ஒருபோதும் மனதால், புத்தியால் எண்ணத்தாலும் நம்பிக்கைக்கு புறம்பாகக் கூடாது. நம்பிக்கையானவர் என்றாலே என்றென்றும் ஒரு தந்தை யன்றி வேறு யாருமில்லை என்றிருப்பார். எண்ணத்தாலும் தேகம், தேக உறவுகள், சொந்த பந்தம், மனிதர்கள் காட்சிப் பொருட்கள் எதுவும் கவர்ச்சிக்கக் கூடாது. எப்படி துணைவன் -துணைவி ஒருவருக்கொருவர் நம்பிக்கையுடன் வாழ்கின்றனர், கனவிலும் பிறரை நினைவு செய்தால் நம்பிக்கையானவர் என்று சொல்ல முடியாது. பிரம்மா பாபாவை பார்க்கும்பொழுது எண்ணத்தாலும் வேறு ஒருவரை நினைத்ததில்லை. எல்லாமே ஒரு பாபா தான், இந்த நிலையை நம்பிக்கையானவர் என்று சொல்லப்படும். ஒருவேளை பதார்த்தங்கள், பொருட்கள் மீதோ ஈர்ப்பு உள்ளதென்றால் சாதனையில் பங்கம் ஏற்பட்டுவிடும். நம்பிக்கையிலும் பங்கம் ஏற்பட்டுவிடும். உடைந்தது ஒருபோதும் முழுமையோ, பூஜைக்குகந்ததாகவோ மாறாது. எனவே எண்ணத்தாலும் வேறு கவர்ச்சிக்கு இசையாமல் நம்பிக்கைக்கு பாத்திரமாக உள்ளேனா? இல்லையா? ஒருவேளை சிறிதேனும் பிரத்தியேகமாக எவர் மீதேனும் ஈர்ப்போ, நல்ல குணமுள்ளவர், நன்கு சேவை செய்பவர், நல்ல சம்ஸ்காரம் உள்ளவர் என்று

கவனமோ செல்லுமானால் நம்பிக்கைக்குரியவர் என்ற பெயர் பட்டியலில் இருந்து விடுபட்டுவிடுவார். நான் குறையுள்ள மூர்த்தியா? பூஜைக்குரிய மூர்த்தியா என சோதனை செய்யுங்கள். எங்கேனும் சற்று அதிமிதமான ஈர்ப்பு, பற்று செல்வதில்லை தானே? வார்த்தை, செயலை விடுங்கள். எண்ணத்தாலும் ஈர்ப்பு கூடாது. எண்ணத்தாலும் ஈர்ப்பு உள்ளதென்றால் விண்ணம் (குறையுள்ள மூர்த்தி) என்ற பட்டியலில் வந்து விடுவீர்கள். சோதனை செய்ய தெரியுமல்லவா? நல்லது.

நாலாபுறமும் உள்ள அன்பின் அடையாளம் தருபவர்கள், ஒவ்வொரு கட்டளையையும் எண்ணம், சொல், செயலில் கொண்டுவருபவர்கள் என்றென்றும் தன்னை தந்தைக்கு நிகராக எளிமையாகவும், எடுத்துக்காட்டாகவும் வைத்திருப்பவர், பிரம்மா பாபாவின் ஒவ்வொரு அடி மீதும் அடி வைத்து சக்திசாலியாகி பாப்சமான் ஆகியே விடுவேன் என்ற திட சங்கல்பம் உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம் : சாட்சியாளர் நிலை மூலமாக ஹீரோ நடிப்பை நடிப்பவர் சகஜ முயற்சியாளர் ஆகுக

சாட்சியாளர் எனும் மனோநிலை நாடகத்தில் ஹீரோவாக நடிப்பதற்கு உதவி செய்கிறது. சாட்சி நிலை இல்லையெனில் ஹீரோவாக நடிக்க முடியாது. சாட்சி நிலை என்பது தேகத்திலிருந்து விடுபட்டிருத்தல், ஆத்மா எஜமானாக இருப்பதாகும். தேகத்தையே சாட்சியாக பார்ப்பது இராஜா. இந்த தேகத்தின் மூலம் செயல்படுத்துபவர் இது போன்ற சாட்சி நிலையே சுலபமான முயற்சியை அனுபவம் செய்ய வைக்கும். ஏனெனில் இந்த நிலையில் எந்தவிதமான தடையும், கடினமும் வர இயலாது. இதுவே முதன்மையான பயிற்சி, இந்த பயிற்சியால் மட்டுமே இறுதியில் வெற்றி பெறுவீர்கள்.

சுலோகன்: பரிஸ்தா ஆக வேண்டுமெனில் தனது அனைத்து உறவுகளையும் (ரிஸ்தா) ஒரு பிரபுவிடம் (தந்தையிடம்) இணைத்துக் கொள்ளுங்கள்